1969 மார்ச் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா கணக்கம்பட்டி அரப்புளிப் பட்டிக் கிராமங்களுக்குள்ள சாலை வசதிபற்றியது. ஆகவே அதுபற்றி திரு. ராமச்சந்திர துரை அவர்கள் வினாக்கேட்கலாம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சாலை கிணறுகள் போன்ற வசதிகள் செய்துகொடுக்க 1966-67-ல் கொடுக்கப் பட்ட தொகை எவ்வளவு ? தற்சமயம் கொடுக்கப்பட்டிருப்பது எவ்வளவு? அதிகமாக இருக்கிறதா அல்லது குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நிதி நிலை அறிக்கைமீது, இம்மானியக் கோரிக்கைமீது விவாதம் நடக்கும்போது இதுபற்றிய விவரங் கள் கிடைக்கலாம்.

தக்கோலம் நகரப் பஞ்சாயத்து

*146 வினா : **திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) அரக்கோணம் தாலுக்கா தக்கோலம் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் எக்சிகியூடிவ் ஆபீசரை அடித்ததுபற்றி 19—10—1967-ல் அத் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினர் மாவட்டக் கலெக்டரிடம் கொடுத்த புகார் மனு விசாரணை செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) அத்தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினரிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 19—10—1967 தேதி யுள்ள மனு யாதும் கிடைக்கப்பெறவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

Flush-out latrines in jails

*147 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal for the construction of flush-out latrines for the convenience of prisoners in jails in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளிலும், துணைச் சிறைச் சாலைகளிலும் ஐந்தாண்டுகளுக்கான படிப்படியான திட்டத்தில் நீரடிக் கழிப்பிடங்கள் அமைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டுக்கும் ரூ. 3 லட்சம் ஒதுக்கீட்டிற்காகச் சிறைத் துறைத் தலைவர் அனுப்பிய செயற்குறிப்பைத் தமிழ் நாட்டு அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : சிறைக் கைதிகளாக இருந்தாலும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்ற முற்போக்குக் கருத்து இந்த அரசாங்கத்திற்கு உண்டு என நான் கருது கிறேன். ஆகவே, மேலும் என்னென்ன வசதிகள் செய்யத் திட்டமிடப் பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சிறை கைதிகளுக்கு எல்லா வசதிகளையும் செய்துகொடுக்க அரசு முயற்சிக்கிறது என்பதை ஒப்புக் கொண்டதற்கு என் நன்றி. என்ன வசதிகள் தேவையோ அவற்றைச் செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. இது ப்ளஷ் அவுட் லெட்ரீன் பற்றியது. இதற்கு மூன்று லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவு செய்ய உத்தேசித்து அதற்காகக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது.